பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
19 07 2025 **SATURDAY** 6 45 **AM**
வணக்கம்-மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் வரும் திங்கட்கிழமை தொடங்கவுள்ளதை அடுத்து, நாளை அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

2. உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட செமி கண்டக்டர் **Chip** இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. திருவள்ளூர் மாவட்டம், காட்டுப்பள்ளியில் கடல் நீரை குடிநீராக்கும் ஆலையின் பராமரிப்புப் பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும் என்று மாநில அமைச்சர் திரு. கே.என். நேரு கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் அரசு அலுவலகங்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதில் திமுக அரசு போதிய கவனம் செலுத்தவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

5. இந்தியா - இங்கிலாந்து மகளிர் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி, லண்டனில் இன்று நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>>>

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் வரும் திங்கட்கிழமை தொடங்கவுள்ளதை அடுத்து, அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

புதுதில்லியில் நாளை நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் சுமுகமாக நடைபெற அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்பை அரசு கோரியுள்ளது.

வரும் திங்கட்கிழமை தொடங்கவுள்ள மழைக்கால கூட்டத் தொடர் அடுத்த மாதம் 21ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத் தொடரில் பல முக்கியமான மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டு, நிறைவேற்றப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>>

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட செமி கண்டக்டர் **Chip** இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்படும் என்று மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

ஹைதராபாதில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இதன்மூலம் இந்தியா உலகில் முக்கியமான செமிகண்டக்டர் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றாக உருவெடுக்கும் என்று கூறினார்.

ஏற்கனவே, மத்திய அரசு ஆறு இடங்களில் செமிகண்டக்டர் ஆலைகள் அமைப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளதாகவும், அதற்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் செயற்கை நுண்ணறிவு தொலைநோக்கு திட்டத்தின் கீழ், விரைவில் இலவச தரவுகள் பதிவேற்றம் செய்யப்படும் என்றும், செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துவது தொடர்பாக 10 லட்சம் பேருக்கு பயிற்சி அளிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

2047ஆம் ஆண்டில் இந்தியா, உலகின் இரண்டாவது மிகப் பெரிய பொருளாதார நாடாக விளங்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>>>**

சென்னை மாநகர மக்களுக்கு தட்டுப்பாடின்றி குடிநீர் கிடைக்க மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம், காட்டுப்பள்ளியில் கடல் நீரை குடிநீராக்கும் ஆலையில் நடைபெற்று வரும் பராமரிப்புப் பணிகளை நேற்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிட் பேசிய அவர், இப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, ஆலை பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும் என்று கூறினார்.

பழுதான இயந்திரங்கள் அகற்றப்பட்டு, வெளிநாட்டிலிருந்து உபகரணங்களை இறக்குமதி செய்து பொருத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆறு மாதத்திற்குள் ஆலையில் மீண்டும் பணிகளை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

**<<<<<<>>>>>>>**

தமிழகத்தில் அரசு அலுவலகங்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதில் திமுக அரசு போதிய கவனம் செலுத்தவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

நாகை மாவட்டம், கீழ்வேலூரில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட போது, இதனை தெரிவித்த அவர், அஇஅதிமுக ஆட்சிக் காலத்தின் போது வேலைவாய்ப்பு, கல்வி ஆகியவற்றுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டதாக கூறினார்.

ஏழை எளிய மக்களுக்கு மருத்துவ சிகிச்சை கிடைக்க வேண்டும் என்பதற்காக ஏராளமான மருத்துவமனைகள் கடந்த ஆட்சியில் தொடங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உர தட்டுப்பாடு நிலவுவதாகவும், குறித்த நேரத்தில் விவசாயிகளுக்கு உரம் கிடைக்க திமுக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி கேட்டுக் கொண்டார்.

<<<<<<>>>>>>

நாமக்கல் மாவட்டத்தில் விசைத்தறி தொழிலாளர்கள் வறுமையில் வாடுவதால் அவர்களுக்கு உரிய வருவாய் கிடைக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. பெ. சண்முகம் கூறியுள்ளார்.

திருச்செங்கோட்டில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், விசைத்தறி தொழில் நலிவடைந்துள்ளதால், அதில் பணியாற்றும் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நீர்நிலைகளின் கரையோரம் வசிக்கும் மக்களின் குடியிருப்புகளை நீதிமன்ற உத்தரவின்படி, அகற்றுவதற்கு முன்பாக மாற்று இடங்களை மாநில அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்றும் திரு. சண்முகம் கேட்டுக் கொண்டார்.

<<<<<<>>>>>>

மாம்பழத்திலிருந்து மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை தயாரித்து, சர்வதேச சந்தையில் விற்பனை செய்யும் வகையில், விவசாயிகளை தயார்படுத்தும் பணியில் தமிழ்நாடு தோட்டக்கலைத் துறை தீவிரம் காட்டி வருகிறது.

சேலத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இதுதொடர்பாக பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாகவும், விலை வீழ்ச்சியால் விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் திரு. குமரவேல் பாண்டியன் கூறினார்.

(சவுண்ட் பைட் - குமரவேல் 20 செகண்ட்ஸ்)

இந்திய மாம்பழங்களுக்கு சர்வதேச சந்தையில் நல்ல வரவேற்பு உள்ளதால், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களாக அதனை மாற்றும் போது விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும் என்று வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழக நிர்வாக இயக்குநர் திரு. அழகு சுந்தரம் கூறினார்.

(சவுண்ட் பைட் - அழகு சுந்தரம் 30 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>

ரயில் பயணிகளின் வசதியை கருத்தில் கொண்டு, சில ரயில்களில் கூடுதல் பெட்டிகள் இணைக்கப்படும் என்று ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.

கரூர், நாமக்கல், சேலம் வழியாக இயக்கப்படும் நாகர்கோவில் - கச்சுகுடா வாராந்திர விரைவு ரயிலில் இன்று முதல் படுக்கை வசதி கொண்ட பெட்டி ஒன்று கூடுதலாக இணைக்கப்படவுள்ளது.

சென்னை சென்ட்ரலிலிருந்து - கோவை வரை இயக்கப்படும் சதாப்தி விரைவு ரயிலில் நாளை மறுநாள் முதல் நிரந்தரமாக கூடுதலாக ஒரு குளிர்சாதன பெட்டி இணைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பெங்களூருவிலிருந்து – கோவைக்கு நாள்தோறும் இயக்கப்படும் உதய் விரைவு ரயிலில் நாளை மறுநாள் முதல் இரட்டை அடுக்கு குளிர்சாதன வசதி கொண்ட பெட்டி கூடுதலாக இணைக்கப்படும் என்று சேலம் கோட்ட ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

இருவரிச் செய்திகள்

பாதுகாப்புத்துறை தொடர்பான முக்கியமான ரகசியங்களை ஈரானுக்கு தெரிவித்ததாக பாதுகாப்புப் படைவீரர் ஒருவரை இஸ்ரேல் கைது செய்துள்ளது.

<<<<<<>>>>>>

மியான்மர், திபெத் மற்றும் ஆப்கானிஸ்தானில் இன்று அதிகாலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.

<<<<<<>>>>>>

சத்திஷ்கரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது, 6 நக்ஸலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

<<<<<<>>>>>>

பீகாரில் கடந்த இரண்டு நாட்களில், மின்னல் தாக்கி, உயிரிழந்தோரின் எண்ணிக்கை 34ஆக அதிகரித்துள்ளது.

<<<<<<>>>>>>

கர்நாடகாவில் சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிக்காக தலா 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அம்மாநில துணை முதலமைச்சர் திரு. டி.கே. சிவக்குமார் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

தருமபுரி மாவட்டம், பொம்மிடி ரயில் நிலையத்தில் சுமார் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளுக்கு, சேலம் ரயில்வே கோட்ட மேலாளர் திரு. பன்னாலால் அறிவுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

தூத்துக்குடி மாவட்டத்தில் காவல்துறை வாகனங்களை இயக்கும் காவலர்கள் கட்டாயம் சீட் பெல்ட் அணிய வேண்டும் என்று மாவட்ட காவல்துறை அறிவுறுத்தியுள்ளது.

<<<<<<>>>>>>

விழுப்புரம் மாவட்ட வளர்ச்சிக்கான ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் கூட்டம் நேற்று ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

<<<<<<>>>>>>

நீதிமன்ற உத்தரவை அடுத்து, கரூர் மாவட்டம், சின்ன தாராபுரம் மாரியம்மன் கோவில் நடை நேற்று திறக்கப்பட்டது,

<<<<<<>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

இந்தியா - இங்கிலாந்து மகளிர் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டி லண்டனில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு தொடங்குகிறது.

மூன்று ஆட்டங்களை கொண்ட இப்போட்டியின் முதலாவது ஆட்டத்தில், இந்தியா வெற்றிபெற்று 1-0 என்ற ஆட்டக்கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

<<<<<<>>>>>>

ஹங்கேரியில் நடைபெற்று வரும் சர்வதேச மல்யுத்த போட்டியில், இந்தியா நேற்று இரண்டு தங்கப்பதக்கம் உட்பட நான்கு பதக்கங்களை வென்றது.

புடாபெஸ்டில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதிச்சுற்றில் மகளிர் 53 கிலோ எடைப்பிரிவில் **Antim Panghal, 7-4** என்ற புள்ளிக்கணக்கில் ரஷ்யாவின் **Natalia-**வை வென்றார்.

சர்வதேச போட்டியில் **Antim Panghal** இந்த ஆண்டு கைப்பற்றிய இரண்டாவது தங்கப்பதக்கம் இதுவாகும்.

72 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் **Harshita** 10-0 என்ற புள்ளிக்கணக்கில் கஜகஸ்தானின் **Zhamila Bakbergenova-**வை வென்றார்.

அதேநேரத்தில், 57 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் **Neha Sangwan** வெள்ளிப்பதக்கத்தையும், 50 கிலோ எடைப்பிரிவில் **Neelam** வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை, 3 தங்கம், 1 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

**<<<<<<>>>>>>>**

ஜார்ஜியாவில் நடைபெற்று வரும் மகளிர் உலக கோப்பை செஸ் போட்டியில் இந்தியாவின் **Koneru Humpy, Harika, Vaishali, Divya** ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

இப்போட்டியில் ஒரே நேரத்தில் இந்திய வீராங்கனைகள் நான்கு பேர், காலிறுதிக்கு முன்னேறியிருப்பது இதுவே முதல் முறையாகும்.

**<<<<<<>>>>>>>**

இந்திய தேசிய ரைஃபிள் சங்கத்தின் தலைவராக உள்ள திரு. **Kalikesh Narayan Singh Deo** சர்வதேச துப்பாக்கிச் சுடுதல் சம்மேளனத்தின் இடைக்கால தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்த அதிகாரப்பூர்வ கடிதம், ஜெர்மனின் முனிச் நகரில் உள்ள இந்த சம்மேளனத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து வரப்பெற்றுள்ளதாக இந்திய துப்பாக்கி சுடுதல் சங்கத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**<<<<<<>>>>>>>**

உலக கோப்பை மகளிர் கபடி போட்டி ஹைதராபாதில் அடுத்த மாதம் 3ஆம் தேதி முதல் 10ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>>**